**MEDIA RELEASE – 04 JAN 2011**

# சகல வாடிக்கையாளர்களுக்கும் செலான் வங்கியின் SURE வெகுமதிகள்

செலான் SUREஇன் அறிமுகத்துடன், இலங்கை முழுவதுமுள்ள அதன் ஆயிரக்கனக்கான வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வெகுமதிகளை செலான் வங்கி விஸ்தரித்துள்ளது.

அதன் பெயர் குறிப்பிடுவதுபோன்று, 'SURE' தமது கணக்குகளில் ரூ. 20,000/-ஐ ஆகக்குறைந்த வைப்பாகக் கொண்டுள்ள சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளைக் (இணைந்த மற்றும் தனிநபர்) கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு பரிசுகளையும் பணப்பரிசுகளையும் வழங்கும் ஒரு திட்டமாகும்.

திருமணம், குழந்தை பிறப்பு, சிரேஷ்ட பிரஜைகளின் பிறந்த நாள் மற்றும் சத்திரசிகிச்சை ஆகிய, ஒருவரின் நான்கு பிரதான பிரிவுகளை SURE நோக்குகின்றது.

குறிப்பிட்ட சகல கணக்கு வைத்திருப்போருக்கும் திருமணம் மற்றும் குழந்தை பிறப்பின் போது விசேட பணப்பரிசுகள் வழங்கப்படும். தனியார் அல்லது அரசாங்க வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைக்கு உட்படும்போது (கண் சிகிச்சை (கற்றாக்) உள்ளடங்களாக) பணம் வழங்கப்படும். கணக்கு வைத்திருப்பவர்களின் வாரிசுகளுக்கும் இது வழங்கப்படும்.

அத்துடன், சகல சிரேஷ்ட கணக்கு வைப்பாளர்களுக்கும் அவர்களின் 60ஆவது பிறந்த நாள் அல்லது அதற்கு பிந்திய பிறந்த நாளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

அதற்கு ஒரு படி மேலே போய், ஒவ்வொரு ஆறு மாதத்திலும் 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு பேங்கொக்குக்கான மூன்று பகல், இரண்டு இரவு சுற்றுலா வழங்கப்படும்.

ரூ. 20,000/- தொடக்கம் ரூ. 30,000/-, ரூ. 30,001/- தொடக்கம் ரூ. 60,000/-, ரூ. 60,001/- தொடக்கம் ரூ. 90,000/-, ரூ. 90,001/- தொடக்கம் ரூ. 150,000/- மற்றும் ரூ. 150,001/- இற்கு அதிகமாக தமது கணக்குகளில் தொடர்ச்சியாக வைத்திருப்போர் இதற்கு தகுதி உடையவர்களாவர். கணக்கில் மிகுதியாயுள்ள ஒவ்வொரு ரூ. 20,000/-உம் ஒரு வாய்ப்பை வழங்குவதுடன், ரூ. 20,000/-இன் மடங்குகள் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும்.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தலுக்கான உதவிப் பொது முகாமையாளர் கமல் தேசப்பிரிய தெரிவிக்கையில், "அன்புடன் அரவணைக்கும் வங்கியாக திகழ்வதில் நாம் பெருமையடைகிறோம். நாம் மக்களின் இதயத்துடிப்பை அறிவது மாத்திரமல்லாமல், இலங்கை மக்களின் எதிர்பார்ப்புகளையும் அறிந்துள்ளோம். புத்தாக்கமான உற்பத்திகளை இலங்கை மக்களுக்கு தொடர்ந்து வழங்குவதுடன், SURE இன் அறிமுகம் எமது அர்ப்பணிப்பை இலங்கை மக்களுக்கு எடுத்துச் செல்கின்றது.

**Media Contact**
Kamal Deshapriya - AGM Marketing, Seylan Bank PLC. M: 077 381 51 33
Adahas PR – Kumar de Silva 0777 379 973. Tharindra de Silva 0777 560 611